செய்தி வெளியீடு எண்.76 நாள்.03.02.2017

# திருவள்ளூர் கலை சங்க மைதானத்தில் சுகாதாரத்துறை சார்பாக தட்டம்மை மற்றும் மணல்வாரி அம்மை கூட்டுத் தடுப்பூசி விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்

~~~~~~

திருவள்ளூர் கலை சங்க மைதானத்தில் சுகாதாரத்துறை சார்பாக தட்டம்மை மற்றும் மணல்வாரி அம்மை கூட்டுத் தடுப்பூசி விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (04.02.2017) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பில் மாவட்ட ஆட்சியர் கூறியதாவது "திருவள்ளூர் மாவட்டத்தில் 06.02.2017 தொடங்கி 9 மாதம் முதல் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு தட்டம்மை மற்றும் மணல்வாரி அம்மை கூட்டுத் தடுப்பூசி வழங்கும் முகாம் நடைபெற உள்ளது. மணல்வாரி அம்மை நோய் பாதிப்பினால் பிறக்கும் குழந்தைகளுக்கு பலவித பிறவிக் குறைபாடுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தட்டம்மையினால் கண்பார்வை இழப்பு மற்றும் மூளை அழற்சி நோய் ஏற்பட வாய்ப்பு உள்ளது. தட்டம்மை மற்றும் மணல்வாரி அம்மை நோயினைத் தடுக்கும் பொருட்டு தடுப்பூசி மருந்து அரசால் இலவசமாக அளிக்கப்பட உள்ளது.

மாவட்டத்தில் உள்ள பள்ளிகள், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி மையம் மற்றும் பள்ளி செல்லா குழந்தைகள் என 9 மாதம் முதல் 15 வயதிற்குட்பட்ட குழந்தைகள் என மொத்தம் 5,60,704 குழந்தைகளுக்கு 1977 அரசு மற்றும் தனியார் பள்ளிகளிலும் 1787 அங்கன்வாடி மையங்களிலும் மற்றும் அனைத்து கிராமங்களிலும் முகாம்கள் அமைக்கப்பெற்று தடுப்பூசி அளிக்கப்பட உள்ளது. இம்முகாமில் 483 சுகாதாரத் துறை பணியாளர்கள், 1209 ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்கள் ஆக மொத்தம் 1692 எண்ணிக்கையிலான நபர்கள் 403 குழுக்கள் மூலமாக ஈடுபடுத்தப்படவுள்ளனர். இந்த தடுப்பூசி முகாம் சிறப்பாக நடைபெற் கூட்டுமன்றக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சியர் தலைமையில் 24.01.2017 அன்று நடைபெற்றது. இந்த கூட்டுத் தடுப்பூசி வழங்குவதற்கான விழிப்புணர்வு மக்களிடையே ஏற்படுத்த சுமார் 500 மாணவ மாணவியர்கள் பேரணியில் கலந்துகொண்டனர். 9 மாதம் முதல் 15 வயதிற்குட்பட்ட அனைத்து குழந்தைகளுக்கும் இம்முகாமின் மூலம் தடுப்பூசி பெற்று பயன்பெற வேண்டும்" என்று கூறினார்

இந்நிகழ்ச்சியில் பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் திரு.டி.ஏ.ஏழுமலை, இணை இயக்குநர் (மருத்துவம் (ம) ஊரகநலப்பணிகள்) மரு.மோகனன், துணை இயக்குநர் (சுகாதாரப் பணிகள்) மரு.பிரபாகர், துணை இயக்குனர்(மருத்துவம் (ம) ஊரக நலப்பணிகள்) மரு.தயாளன், ஆரம்ப சுகாதார நிலைய மற்றும் அரசு மருத்துவமனை மருத்துவர்கள், சுகாதாரத்துறை பணியாளர்கள், மாணவர்கள் கலந்துக் கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருவள்ளூர்.**
~~~~~~